**உசிலம்பட்டி நகராட்சி மன்றம்**
**நகர்மன்றக்கூட்டம்**
**நாள். 31.05.2021 திங்கட்கிழமை   நேரம் : காலை 10.00 மணி**

---

**மன்றப்பொருள்:-1**

உசிலம்பட்டி நகராட்சி பொதுச்சுகாதார பிரிவு வாகன எண். TN-58 AW-3247-இன் Speed lan cable மற்றும் Accelerator Cable திடிரென பழுது ஏற்பட்டதால் பொது சுகாதார அவச அவசியம் கருதி பழுதை திரு. எஸ்.ஜெயராஜ்பாண்டி, டெக்ஸ்கோ ஓட்டுநர் சொந்த செலவில் சரிசெய்து அதற்கான செலவினத்தொகை ரூ. 1261/– வழங்க கோரியுள்ளார். மேற்படி செலவினத்தொகை ரூ. 1261/– திரு. எஸ்.ஜெயராஜ்பாண்டி, டெக்ஸ்கோ ஓட்டுநருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:–**

1).பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி உடனடியாக பழுது சரிசெய்ததற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). செலவினத்தொகை ரூ. 1261/– மன்றத்தின் முன் அனுமதி பெற்று வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2217/2016/எச்.1)

**தீர்மானம் எண். 1**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்:-2**

உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கோவிட்–19 தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளவும், பொதுமக்களுக்கு முககவசம் அணிவது மற்றும் சமூக இடைவெளியை கடைபிடிப்பது தொடர்பாக விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளவும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி பிரிவு 15–இன்கீழ் நீர்த்த சுண்ணாம்பு தூள் 10 MT, சோடியம் ஹைப்போ குளோரைடு 5MT மற்றும் handheld mega phone 3 எண்ணம், Memory Card 3 எண்ணம், லித்தியம் பேட்டரி சார்ஜர் 3 எண்ணம் கொள்முதல் செய்ததையும் அதற்கான செலவினத்தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:–**

பொதுச்சுகாதார அவசர அவசியம் மற்றும் கோவிட்–19 அவசர அவசியம் கருதி பொருட்கள் கொள்முதல் செய்ததையும் அதற்கான செலவினத்தொகை வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 77/2021/எச்.1)

**தீர்மானம் எண். 2**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்:-3**

உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கோவிட்–19 தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள முன்கள பணியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு கபசுர குடிநீர் வழங்க கோவிட்–19 தடுப்பின் அவசர அவசியம் கருதி பிரிவு 15–இன்கீழ் கபசுர குடிநீர் சூரயம் 50 கி.கி. கொள்முதல் செய்ததையும் அதற்கான செலவினத்தொகை வழங்கவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:–**

கோவிட்–19 தடுப்பின் அவசர அவசியம் கருதி பிரிவு 15–இன்கீழ் கொள்முதல் செய்ததையும் அதற்கான செலவினத்தொகை வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 77/2021/எச்1.)

**தீர்மானம் எண். 3**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்:-4**

திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016–இன்படி உசிலம்பட்டி நகராட்சியில் இயங்கி வரும் 5 TPD உற்பத்தி திறன் கொண் நுண் உர தயாரிப்பு கூடத்தில் (MCC) உற்பத்தி செய்யப்படும் உரத்தின் தரத்தினை ஆய்வு செய்து தருவதற்கு ரூ. 4246/– வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி உரம் தர ஆய்வு செய்வதற்கு உரிய செலவினத்தொகை ரூ. 4246/– தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 12212/2019/எச்1.)

**தீர்மானம் எண். 4**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்: 5**

உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் முடிதிருத்தகம் / அழகு நிலையம் / ஸ்பா / மசாஜ் நிலையம் நடத்துவோர்கள் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 249– இன்படி தொழில் உரிமம் நகராட்சியில் பெற்றுக்கொள்ளக்கோரி ஆங்கில நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு M/s. TRINITY MIRROR, மதுரை நிறுவனத்திடமிருந்து ரூ. 7,102/–க்கு பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி பட்டியல் தொகை ரூ. 7,102/– M/s. TRINITY MIRROR, மதுரை நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2240/2020/எச்.1)

**தீர்மானம் எண். 5**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்: 6**

இந்நகராட்சி பகுதியில் கொரோனா பரவுதல் அதிகமாக இருப்பதால் கொரோனா தடுப்பு ஊதி போடுவது இரத்த மாதரிகள், சளி மாதிரிகள் எடுக்கவும் பயன்படும் படிவங்கள் பிரிண்ட் எடுத்திடவும், மேலும் காய்ச்சல் கண்டவர்களின் விபரம் குறித்த பதிவுகள் செய்திட படிவம் தயார் செய்திடவும் பிரிண்ட் எடுக்க பயன்படும் டோனர் தேவையுள்ளதால் தற்பொழுது உடனடியாக 12 எண்ணிக்கை டோனர் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ. 60,000/– க்கு மன்றத்தின் முன் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1).மன்றம் அனுமதி வழங்கலாம்

2). டோனர் தேவையின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 900/2021/எச்.1)

**தீர்மானம் எண். 6**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்: 7**

இந்நகராட்சி பொதுச்சுகாதார பிரிவு பயன்பாட்டிற்காக ரூல்டு நோட்டு, ஏ4 சைஸ் பேப்பர், அலுவலக பைல், ஸ்டேபிலர் பின், சிலோ டேப் மற்றும் பேனா ஆகிய பொருட்கள், BPL சர்வே செய்வதற்கும், கொரோனா தடுப்பு பணி செய்வதற்கும், டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்வதற்கு அவ்வப்பொழுது அவசர தேவைக்காக ஸ்ரீ முருகன் ஸ்டோர் உசிலம்பட்டி அவர்களிடம் பொருட்கள் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. அதற்கான பில் தொகை ரூ. 8,380/– (ரூபாய் எட்டாயிரத்து மூன்னூற்று எண்பது மட்டும்) ஸ்ரீ முருகன் ஸ்டோர் உசிலம்பட்டி அவர்களுக்கு வழங்க மன்றத்தின் முன் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1).மன்றம் அனுமதி வழங்கலாம்

2). எழுது பொருட்களின் அவசர அவசியம் கருதி பொருட்கள் பெறப்பட்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 957/2014/பி2)

**தீர்மானம் எண். 7**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்: 8**

இந்நகராட்சிக்கு சொந்தமான பொதுச்சுகாதார பிரிவு வாகன எண். டி.என்.58, ஏ.டபுள்யூ.3247–க்கு வாகன காப்பீடு 28.05.2021 உடன் முடிவடைவதால் 29.05.2021 முதல் 28.05.2022 வரை வாகன காப்பீடு புதுப்பிக்க உரிய தொகை ரூ. 32,975/– M/s. United India Insurance Co., Ltd., உசிலம்பட்டி நிறுவனத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி வாகன காப்பீடு புதுப்பிக்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2217/2016/எச்.1)

**தீர்மானம் எண். 8**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்: 9**

இந்நகராட்சிக்குச் சொந்தமான ஈப்பு வாகனம் TN-58 AW 2747–க்கு 2021–2022–க்கான வாகன காப்பீடு முடிவடைவதால், மேலும் இவ்வாண்டிற்கு வாகன காப்பீடு புதுப்பித்தல் தொகை ரூ. 16,746/– (ரூபாய் பதினாராயிரத்து எழுநூற்று நாற்பத்து ஆறு மட்டும்) யுனிடெட் இந்தியா லிமிடெ் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1).மன்றம் அனுமதிக்கலாம்.

2).வாகன தேவையின் அவசர அவசியம் கருதி செலவுகள் மேற்கொண்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2887/2013/எச்.1)

**தீர்மானம் எண். 9**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–10**

இந்நகராட்சியின் நகரமைப்பு பிரிவில் புதிதாக கட்டிட வரைபட வரைவாளர் உரிமம் பதிவு செய்யும் பொருட்டு திரு. மு.கலைச்செல்வன், பி.இ., (சிவில்) த/பெ. முருகன் என்பவர் விண்ணப்பம்

செய்துள்ளார். அன்னாரை இந்நகராட்சி நகரமைப்பு விதிகளுக்குட்பட்டு பதிவு பெற்ற கட்டிட வரைவாளராக உரிமம் வழங்குவது தொடர்பாக மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**
1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இந்நகராட்சி நகரமைப்பு விதிகளுக்குட்பட்டு உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
**தீர்மானம் எண். 10**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்—11</u>

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 1 முதல் 24 வார்டுகளில் உள்ள காலியிடவரி விதிப்பு எண்கள் மொத்தம் 524, அதற்குரிய நிலுவைத்தொகை ரூ. 7,37,166/— நடப்புத்தொகை ரூ. 2,68,522/— ஆக மொத்தம் ரூ. 10,05,718/— கணினியில் பதிவாகி உள்ளது. எனவே, மேற்படி தொகையினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 118—இன்படி வசூலிக்க முடியாத இனமாக கருதி தள்ளுபடி செய்திட மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**
மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 692/2021/அ1)
**தீர்மானம் எண். 11**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்—12</u>

இந்நகராட்சி அம்மா உணவகத்திற்கு தேவையான இட்லி டோக்கன், சாம்பார் டோக்கன் மற்றும் தயிர் டோக்கன் ஆடுவதைச்சாலை கட்டண ரசீது கொள்முதல் செய்யவேண்டியுள்ளது. அதற்கான உத்தேச செலவினம் ரூ. 50,000/—த்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**
1).மன்றம் அனுமதிக்கலாம்
2).அம்மா உணவக டோக்கன்களின் அவசர அவசியம் கருதி கொள்முதல் செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 957/2014/எச்.1)
**தீர்மானம் எண். 12**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

---

மன்றப்பொருள்—13

உசிலம்பட்டி நகராட்சி குடிநீர் பிரிவில் காவலர்களை மாத ஊதிய அடிப்படையில் பணியாளர்களை சப்ளை செய்யும் பணிக்கு செலவுகள் மன்றத்தின் பார்வைக்கு.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | உசிலம்பட்டி நகராட்சி குடிநீர் பிரிவில் காவலர்களை மாத ஊதிய அடிப்படையில் பணியாளர்களை சப்ளை செய்யும் பணி | 9,71,000 |

| | | |
|---|---|---|
| | மேற்கொள்ளுதல் | |

மேற்படி பணிக்கு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

1). திரு.ஆர் .ரவிக்குமார் ,ஒப்பந்ததராரர் என்பவர் மாதம் ஒன்றிற்கு ஒரு நபரை சப்ளை செய்ய ரூ.10,700/–
2.திரு.பி.காட்டுராஜா,ஒப்பந்ததராரர் என்பவர் மாதம் ஒன்றிற்கு ஒரு நபரை சப்ளை செய்ய ரூ.10,820/–
3). திரு.செ.சுதாகர்,ஒப்பந்ததராரர் என்பவர் மாதம் ஒன்றிற்கு ஒரு நபரை சப்ளை செய்ய ரூ.10,800/–ம்.

வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.ஆர் .ரவிக்குமார் ,ஒப்பந்ததரார் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதிக்கும் பார்வைக்கும்.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**
1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). பிரிவு 15–இன்கீழ் பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.
**தீர்மானம் எண். 13**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–14**

உசிலம்பட்டி நகராட்சி –(கோவிட்–19) கொரனா பெரும் தொற்று பாதுகாப்பு முகாம் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் கல்லூரியில் செயல்படுத்தும் பணிக்கு செலவுகள் மன்றத்தின் பார்வைக்கு.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | கோவிட்–19) கொரனா பெரும் தொற்று பாதுகாப்பு முகாம் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் கல்லூரியில் செயல்படுத்தும் பணி மின் வசதி ,படுக்கை வசதி, குடிநீர் வசதி, கழிப்பிட வசதி ஏற்படுத்தும் | **2.53 இலட்சம்** |

மேற்படி பணிக்கு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.
1). திரு.ஆர் .ரவிக்குமார் ,ஒப்பந்ததராரர் என்பவர் மதிப்பீட்டை விட 0.53 % அதிகம்
2). திரு.செ.சுதாகர்,ஒப்பந்ததராரர் என்பவர் மதிப்பீட்டை விட 1.07 % அதிகம்
3) .M/S K.P.K கன்ஸ்ட்ரக்ஸன் என்பவர் மதிப்பீட்டை விட 0.15% குறைவு

வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/S K.P.K கன்ஸ்ட்ரக்ஸன் ,என்ற நிறுவனத்தினரின் விலைப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதிக்கும் பார்வைக்கும்.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**
1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). பிரிவு 15–இன்கீழ் பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.
3).கோவிட்–19 தடுப்பு சிறப்பு நிதியின் கீழ் தொகை வழங்கலாம்.
**தீர்மானம் எண். 14**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்–15**

உசிலம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்–24 அம்பேத்கார் நகரில் உள்ள சமுதாய கழிப்பறையில் தேங்கியுள்ள கழிவு மற்றும் கழிவு நிரை அகற்றும் பணிக்கு (இயந்திரம் மூலம்) ரூபாய்.56000/–க்கான செலவுகள் மன்றத்தின் பார்வைக்கு.

**அலுவலகக்குறிப்பு:-**

1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). பிரிவு 15–இன்கீழ் பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மானம் எண். 15**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்:-16**

இந்நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலைய நுழைவு கட்டணம், பேருந்து நிலைய தரைக்கடை எண். 119/65, ஜே.வி.வி.டி. கடை எண். 119/86, உரிமக்காலம் முடிவடைந்து விட்டதால் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு ரூ. 22,785/–யை ESS ESS publication –ற்கு வழங்க மன்றம் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1705/2020/அ1

**தீர்மானம் எண். 16**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்:-17**

உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.3, காளைத்தேவர் நகரில் நகராட்சி மற்றும் மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அனுமதி பெறாமல் இயங்கி வரும் செம்பு பட்டறை மற்றும் மர இழைப்பகத்தை நிறுத்துமாறு இவ்வலுவலக கடித ந.க.எண். 38/2021/எப்.1, நாள். 12.02.2021–இல் அறிவிப்பு வழங்கப்பட்டதை எதிர்த்து சென்னை, உயர்நீதிமன்ற மதுரை கிளையில் W.P.(MD) NO. 4580,4584,4583 of 2021 மூலம் வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்குகளுக்கு நகராட்சி சார்பில் திரு. கே.மகேந்திரன், வழக்கறிஞரை ஆஜராக கோரவும் அதற்கான செலவினத்தொகை ஒரு வழக்கிற்கு ரூ. 10,000/– வீதம் 3 வழக்குகளுக்கு ரூ.30,000/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

வழக்கின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 38/2021/எச்.1)

**தீர்மானம் எண். 17**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்:-18**

தமிழக சட்டமன்ற தேர்தல் 2021–இல் நடைபெறுவதை முன்னிட்டு கட்சி சின்னங்கள், சுவர் விளம்பரங்கள், பேனர்கள் கட்சி தோரணங்கள் ஆகியன அப்புறப்படுத்தவும், சுவர் விளம்பரங்கள் அழிக்கவும் கீழ்க்கண்டவாறு பொருட்கள் தேவைப்படுகிறது.

| வ.எண். | விபரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | பெயிண்ட் 5 லிட்., பிரஸ் 10, வாலி–10 | 3175 |
| 2 | சிகப்புகாவி 10 கிகி., மஞ்சள்காவி 15 கி.கி. | 3000 |
| 3 | ஏணி வாடகை | 400 |
| 4 | சிகப்பு காவி 3 கி.கி. | 360 |
| 5 | எஸ்.எஸ்.பிரஸ், ரெட் ஹாசிட் | 840 |
| 6 | பிளாஸ்டிக் கயிறு, பேப்பர் பண்டல் | 1950 |
| 7 | பசை பாக்கெட், பேப்பர் ரோல் | 900 |
| 8 | பிளக்ஸ் | 900 |
| | மொத்தம் | 11525 |

மேற்காணும் பொருட்கள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ. 12,000/–த்திற்கு மன்றத்தின் முன் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1).மன்றம் அனுமதிக்கலாம்.

2).பொருட்களின் அவசர அவசியம் கருதி பொருட்கள் வாங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 957/2014/பி2)

**தீர்மானம் எண். 18**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்:19**

உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு–11, வடகாட்டுப்பட்டியில் அமைந்துள்ள பாப்பாபட்டி ஸ்ரீ ஒச்சாண்டம்மன் கோவில் திருவிழாவிற்கு சுகாதார விடுதி, பந்தல் மேடை அமைத்தல், நீர், மோர், பானைகரம் பொதுமக்களுக்கு வழங்கவும் மற்றும் ஜே.சி.பி. இயந்திரம் கொண்டு கோவிலை சுத்தம் செய்யும் பணிகளுக்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.75,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1.மன்றம் அனுமதி வழங்கலாம்

2.அவசர அவசியம் கருதி பிரிவு 15–ன்கீழ் பணிகள் மேற்கொண்டதையும் அதற்கான செலவினத்தொகை வழங்குவதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 384/2020/எச்.1)

**தீர்மானம் எண். 19**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்– 20**

உசிலம்பட்டி நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலும் கொரானா பெரும் தொற்று நோய் பரவி வரும் சூழ்நிலையில் பாதிப்பு ஏற்படும் பகுதிகளில் தகர செட் கொண்டு அடைத்து ,பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படும் வகையில் பந்தல் மூகாம் அமைத்தல் பணிக்கு செலவுகள் மன்றத்தின் பார்வைக்கு.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | உசிலம்பட்டி நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலும் கொரானா பெரும் தொற்று நோய் பரவி வரும் சூழ்நிலையில் பாதிப்பு ஏற்படும் பகுதிகளில் தகர செட் கொண்டு அடைத்து ,பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படும் வகையில் பந்தல் மூலம் அமைத்தல் பணி மேற்கொள்ளுதல் | ரூ.2.10 இலட்சம் |

மேற்படி பணிக்கு இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

1). திரு. R.ரவிக்குமார் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.12 % குறைவு
2). M/s K.P.K கன்ஸ்ரக்ஸன் மதிப்பீட்டை விட 0.12 % அதிகம்

வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s K.P.K கன்ஸ்ரக்ஸன் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதிக்கும் பார்வைக்கும்.

**அலுவலகக்குறிப்பு:-**
1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). பிரிவு 15–இன்கீழ் பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.
**தீர்மானம் எண். 20**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்(பொ),
உசிலம்பட்டி நகராட்சி.